**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 10/2018**
**நாள் 22/03/2024, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ஜெகன்நாதன் | த/பெயர் - குழந்தை முத்து |
| வயது - 66 | தொழில் - |
| விலாசம் - நேமலூர் காலணி, ரோஜா நகரம் அஞ்சல், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி (PW2)**

இவ்வழக்கில் இதற்கு முன் சாட்சியம் அளித்த அண்ணம்மாள் எனது தாயார் ஆவர். அண்ணம்மாள் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியும். அவர் தாக்கல் செய்த வாக்குமூலம் மற்றும் நிருபாண வாக்குமூலத்தில் தெரிவித்த பதில் குறித்து எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது. என்ன ஆட்சேபனை உள்ளது என்றால் தங்கள் தாயார் கோவிலுக்கு செல்வார்களா என்று கேட்டேன் அவர் ஞாயிற்றுகிழமை கோவிலை ஒட்டியுள்ள கிரௌன்ட்டுக்கு மட்டும் தான் செல்வார். அவர் மாரியம்மன், செல்லியம்மன் கோவிலுக்கு செல்வார் எனது தாயார் சர்ச்சுக்கு செல்வதாக கூறுவது தான் ஆட்சேபனை எனக்கு வேறு ஆட்சேபனை இல்லை. எனது தாயார் வாக்குமூலத்தில் தெரிவித்த விவரங்களையே நான் எனது பிரமான வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி பார்த்திபன் இதே நீதிமன்றத்தில், உயர்நீதிமன்றத்தில் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால்

சரிதான். அப்போது எனது குடும்பத்தின் சார்பாக மனவாளன் சாட்சியம் அளித்தார். தற்போது மனவாளன் ஊரில் உள்ளாரா என்றால் உள்ளார் அவருக்கு கால் சரியில்லை நடக்க இயலாது. பொன்னேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்திபனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் பார்த்திபனுக்கும் வழி பிரச்சனை தான் அதற்காக தான் வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. எனது தரப்பில் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மேல் முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படும் போது உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் முறையீட்டுவழக்கு நிலுவையில் இருந்து பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பார்த்திபனுக்கு வழி விடக்கூடாது என்ற என்னத்தில் தான் இவ்வாறு வழக்கு தாக்கள் செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எதிர் பரிகாரம் கோரியுள்ள விவரம் தெரியும். பிரதிவாதி வழி பரிகாரம் கேரியுள்ளார். பார்த்திபனுக்கு அவர் கோரிய வழி உரிமை உள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பானது என்றும் அதை தடுக்க கூடாது என இவ்வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள விவரம் எனக்கு தெரியாது. வழக்கை முடிக்க கூடாது என்பதாலும் வழி விடக்கூடாது என்பதால் நான் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் பார்த்திபனுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை 16 சென்ட் மட்டுமே பிரச்சனை. வருவாய் துறைக்கு எதிரான பரிகாரம் சட்டப்படி அந்த பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மணவாளன் விசாரணை செய்தால் பழைய விவரம் தெரியும் என்பதால் அவரை தவிர்த்து எனது தாயார் சாட்சியம் அளித்தார் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**